மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2022 ம் ஆண்டு ஜூன் மாதம் 14 ம் நாள், செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண்.59/2020

---------

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமத்தில் வசிக்கும் ராஜா என்பவரின் மனைவி சுமார் 50 வயதுள்ள திருமதி.சங்கிலியம்மாள் .. வாதி

/எதிர்/

1.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், வார்டு எண்.10, பெருமாள் கோவில் அருகில் வசிக்கும் வெள்ளைச்சாமி என்பவரின் மகன் சுமார் 42 வயதுள்ள திரு.மகாலிங்கம்.

2.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், பாலாறு மெயின் ரோடு, தோட்டத்தில் இருக்கும் சிங்காரவேலன் என்பவரின் மகன் சுமார் 50 வயதுள்ள திரு.முத்துக்குமாரசாமி.

3.வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பழனி.

4.கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், பாலசமுத்திரம்.

5.மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல்.
.. பிரதிவாதிகள்

வாதி பெயருக்கு பழனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட மரப்பட்டா எண்.4881/2009 ன்படி பாத்தியப்பட்டு ஆண்டனுபவித்து வரும் சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் உள்ளிட்டோர்களோ எவ்வதித்திலும், எக்காலத்திலும் உள்நுழையவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், தாவா செலவுத்தொகையை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>விசயப்பொருளின் மதிப்பு:–</u> தாவா சொத்தை பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வாதியின் தாவா மதிப்பு ரூ.1000/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.30/– பிரிவு 27(சி)–படி கட்டப்பட்டுள்ளது.

வழக்கு மூலம் : 28.07.2009, 10.07.2016 மற்றும் 01.07.2020.

வழக்கு தாக்கல் செய்த நாள்: 03.08.2020

<u>தீர்ப்பாணை</u>

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் மா.பார்த்திபன் மற்றும் பா.ஆனந்தன் ஆகியோர் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் வி.மணிகண்டன் மற்றும் எஸ்.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையாகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் தீர்ப்பாணையை வழங்குகின்றது.

1.இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது.

2.இவ்வழக்கின் செலவுத்தொகையாக 2ம் பிரதிவாதிக்கு ரூ.––– (செலவு தொகை பட்டியல் தாக்கல் இல்லை) –ஐயும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ரூ.––– (செலவு தொகை பட்டியல் தாக்கல் இல்லை)–ஐயும் வாதி செலுத்திவைக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

<u>சொத்து விபரம்</u>

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமத்தில் பழனி வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட மரப்பட்டா எண்.4881/2009–ன்படி புல எண்.410/1 பாலாறு புறம்போக்கு ஸ்தலத்திலுள்ள 10 மா மரங்கள் மற்றும் 5 தென்னை மரங்களுக்கு மரவரியினை செலுத்தி அனுபவித்துக்கொள்ளும் பாத்தியம் சகிதம்.

<u>செலவு தொகை விபரம்</u>

| | 2ம் பிரதிவாதிக்கு | 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு |
|---|---|---|
| 1.வக்காலத்திற்கான வில்லை | -- | -- |
| 2.வழக்கறிஞர் கட்டணம்(முதுநிலை) | -- | -- |
| (இளநிலை) | -- | -- |
| 3.வாதுரைக் கட்டணம் | -- | -- |
| ஆக மொத்தம் | -- | -- |

2022ம் ஆண்டு ஜுன் மாதம் 14ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

(ஒம்)என்.ஞானசம்பந்தம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.59/2020
------

திருமதி.சங்கிலியம்மாள் .. வாதி

/எதிர்/

திரு.மகாலிங்கம் மற்றும் நான்கு நபர்கள். .. பிரதிவாதிகள்

<u>மதிப்பீட்டுச் சீட்டு</u>

| | |
|---|---|
| 1.வழக்கின் தன்மை | : நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் |
| 2.நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு | : 27(சி) |
| 3.வழக்கின் மதிப்பு | : ரூ.1000/-. |
| 4.நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | : ரூ.30/- கட்டப்பட்டுள்ளது. |

உத்திரவுப்படி
(ஒம்)எல்.தேன்மொழி
தலைமை எழுத்தர்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பழனி.